சோலார் மின்சாரம்
கனரக தொழிற்சாலைகள், டையிங், நூல் மில்களுக்கு தேவையான சோலார் மின்சாரம் குறைந்த விலையில் சப்ளை செய்கிறோம்
தொடர்புக்கு
96005 48581

நல்லவே எண்ணல் வேண்டும்..,
எண்ணிய முடிதல் வேண்டும்..,

# சக்கர வியூகம்

தினசரி "தேமதுரத் தமிழோசை உலகமெலாம்" புலனாய்வு நாளிதழ்
www.SAKKRAVIYUGAM.com

TAMIL PRESS CLUB
தமிழ் பிரஸ் கிளப்
Reg.No: 12/2013
தமிழ்நாடு, பாண்டிச்சேரியில் சிறப்பாக செயல்பட்டு வரும் பொது நல அமைப்பிற்கு 2026 ஆம் ஆண்டு உறுப்பினர் சேர்க்கை அனைத்து மாவட்டங்களிலும் ஆரம்பம்...
ஆர்வமுள்ளவர்கள் அமைப்பாளராக இணைந்திட
88705 00000
99 44 616 559

Website: www.sakkraviyugam.com | PRGI:TNTAM/25/A1018 | Email: sakkraviyugam@gmail.com

VOLUME : 01 | ISSUE: 175 | 19.12.2025 | FRIDAY | MARGAZHI : 4 | PRICE : RS.5/-

மலர் : 01 | இதழ் : 175 | 19.12.2025 | வெள்ளிக்கிழமை | மார்கழி : 4 | விலை : ரூ.5/-

3 அரசியல், பண பலத்தால் ஆட்டம் போடும் மணல் கொள்ளை கும்பல்: ஐகோர்ட் கண்டனம்

4 அதிமுக முன்னாள் எம்.பி. சௌந்தரராஜன் ராதாபுரம் தொகுதியில் போட்டியிட விருப்ப மனு

2 "திமுக ஒரு தீய சக்தி; தவெக ஒரு தூய சக்தி" ஈரோட்டில் விஜய் பேச்சு

# அமெரிக்க வரி விதிப்பால் தமிழகத்தில் வர்த்தகம் பாதிப்பு பிரச்சினைக்கு தீர்வு காண பிரதமருக்கு முதல்வர் கடிதம்

சென்னை: டிச.19-

இந்தியப் பொருட்கள் மீது அமெரிக்கா விதித்துள்ள கூடுதல் வரிவிதிப்பால் தமிழகத்தில் ஏற்றுமதி வர்த்தகம் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளதாகவும், இருதரப்பு ஒப்பந்தம் மூலம் பிரச்சினைக்கு விரைந்து தீர்வு காண நடவடிக்கை எடுக்குமாறும் பிரதமர் நரேந்திர மோடியை முதல்வர் மு.க.ஸ்டாலின் வலியுறுத்தியுள்ளார்.

இது தொடர்பாக மோடிக்கு ஸ்டாலின் எழுதியுள்ள கடிதத்தில், ''இந்தியாவிலிருந்து அமெரிக்காவிற்கு ஏற்றுமதி செய்யப்படும் இந்தியப் பொருட்களுக்கு 50 விழுக்காடு வரி விதிக்கப்பட்டுள்ள சூழ்நிலையில், தமிழ்நாட்டின் ஏற்றுமதித் துறைகளில் அதிகரித்து வரும் நெருக்கடிகள் குறித்து அவசரமாகவும், கவலையோடும் இதனை எழுதுகிறேன். தமிழ்நாடு, இந்தியாவின் ஜவுளி மற்றும் ஆடைத் துறை ஏற்றுமதியின் அடித்தளமாக விளங்குகிறது. நாட்டின் ஜவுளி ஏற்றுமதியில் 28 விழுக்காடு அளவிற்குப் பங்களிப்பினை வழங்குவதுடன், சுமார் 75 லட்சம் தொழிலாளர்களுக்கு வேலைவாய்ப்பினை வழங்குகிறது. இந்தியாவின் தோல் பொருட்கள் மற்றும் காலணி ஏற்றுமதியிலும் 40 விழுக்காடு அளவிற்கு முக்கியப் பங்காற்றி, 10 லட்சத்திற்கும் மேற்பட்ட தொழிலாளர்களுக்கு வேலைவாய்ப்பினை வழங்கி வருகிறது.

அமெரிக்க வரிவிதிப்பினால் தற்போது வர்த்தகத்தில் ஏற்பட்டுள்ள இடர்பாடு என்பது வெறும் பொருளாதாரப் பின்னடைவு மட்டுமல்ல; ஈடுசெய்ய முடியாத சமூக இழப்பினை ஏற்படுத்தும் மாபெரும் சவாலாகும். இந்தியாவின் பின்னலாடைத் தலைநகரமான திருப்பூரில், உறுதிப்படுத்தப்பட்ட ஆர்டர்களில் ஏற்றுமதியாளர்களுக்கு 15,000 கோடி ரூபாய் அளவிற்கு இழப்பும் 30 விழுக்காடு வரை கட்டாய உற்பத்திக் குறைப்பும் ஏற்பட்டுள்ளது. அதோடு, புதிய ஆர்டர்களும் கவலை அடையும்





அளவிற்குக் குறைந்து வருகின்றன. திருப்பூர், கோயம்புத்தூர், ஈரோடு மற்றும் கரூர் மாவட்டங்களில் உள்ள ஏற்றுமதியாளர்களுக்கு தினமும் 60 கோடி ரூபாய் அளவிற்கு வருவாய் இழப்பு ஏற்பட்டு வருகிறது. இதனால் பல சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்கள் சரிவின் விளிம்பிற்குத் தள்ளப்பட்டுள்ளன. வேலூர், ராணிப்பேட்டை மற்றும் திருப்பத்தூர் மாவட்டங்களில் உள்ள காலணி உற்பத்தி நிறுவனங்களிலும் இதேபோன்ற மோசமான சூழ்நிலை காணப்படுகிறது.

தற்போது விதிக்கப்பட்டுள்ள இந்த வரி காரணமாக, ஏற்றுமதியாளர்கள் லாபத்தினைக் குறைத்து, தங்கள் வாடிக்கையாளர்களைத் தக்க வைத்துக்கொள்வதற்காக பெருமளவில் தள்ளுபடிகளை வழங்கிட வேண்டிய நிர்பந்தத்திற்கு ஆளாகியுள்ளனர். இது அவர்களின் போட்டித்தன்மை மற்றும் நம்பகத்தன்மையைக் குலைக்கும் வகையில் உள்ளது. இதன் காரணமாக, லட்சக்கணக்கான வேலைவாய்ப்புகள் பறிபோகும் நிலை உள்ளது. ஏற்கெனவே இந்தத் துறைகள் பணி இழப்புகளையும், ஊதிய ஒத்திவைப்புகளையும் சந்தித்து வருகின்றன. இது சமூகத்தில் நிச்சயமற்ற தன்மையை ஏற்படுத்தி அச்சுறுத்துவதாக உள்ளது.

இந்தச் சூழ்நிலையை மேலும் மோசமாக்கும் வகையில், சர்வதேச இறக்குமதியாளர்கள், தங்களது ஆர்டர்களை, வியட்நாம், வங்கதேசம் மற்றும் கம்போடியா போன்ற நாடுகளிலுள்ள போட்டியாளர்களிடம், அங்கு வரிவிதிப்பினால் கிடைக்கும் நன்மையைக் கருத்தில் கொண்டு விரைவாக வழங்கி வருகின்றனர். இதன் காரணமாக, சர்வதேச சந்தை வாய்ப்புகளை இழந்து, மீண்டும் வாய்ப்புகளைத் திரும்பப் பெறுவது என்பது பெருத்த சவாலாக இருக்கும். இது நமது இளைஞர்களின், குறிப்பாக பெண்களின் எதிர்கால வேலைவாய்ப்புகளுக்கு அச்சுறுத்தலான, நீண்டகால தாக்கங்களை ஏற்படுத்துகிறது.

இந்தச் சூழலில், இந்திய அமெரிக்க இருதரப்பு ஒப்பந்தம் மூலம் இந்த வரிச் சிக்கலை விரைவில் தீர்ப்பதற்கு முன்னுரிமை அளிக்குமாறு கேட்டுக் கொள்கிறேன். விரைவான தீர்வின் மூலமாக நமது ஏற்றுமதியாளர்களின் வணிக நிலையை மீட்டெடுப்பதோடு, உலக அளவில் உலகளாவிய உற்பத்தி மையமாக இந்தியாவின் நிலையை வலுப்படுத்திட இயலும். எனவே, நிலையான வர்த்தகத்தை வளர்த்தெடுப்பதற்கும், உள்நாட்டு தொழில்கள் மற்றும் வேலைகளைப் பாதுகாப்பதற்கும் பிரதமர் கொண்டுள்ள உறுதிப்பாட்டின் மீது நம்பிக்கையுடன் இருப்பதோடு, அமெரிக்க வரி விதிப்பினால் ஏற்பட்டுள்ள பாதிப்புகளுக்கு விரைவில் தீர்வு காண வேண்டுமெனவும் கேட்டுக் கொள்கிறேன்'' என தெரிவித்துள்ளார்.



■ மதுரை மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் மதுரை மத்திய சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்ட மாநகராட்சி பகுதியில் மேம்பாட்டு பணிகள் மற்றும் அடிப்படை வசதிகள் குறித்து ஆய்வு மேற்கொள்ளும் போது பொதுமக்களிடம் பெறப்பட்ட மனுக்கள் மீது எடுக்கப்பட்டு வரும் நடவடிக்கைகள் குறித்த ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது.தகவல் தொழில்நுட்பத் துறை மற்றும் டிஜிட்டல் சேவைத்துறை அமைச்சர் பழனிவேல் தியாகராஜன் மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் கே.ஜே.பிரவீன்குமார் இ.ஆ.ப., மாநகராட்சி ஆணையாளர் சித்ராவிஜயன்,இ.ஆ.ப., ஆகியோர் உடன் உள்ளனர்

## மதுரை கிழக்கு ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட பகுதிகளில் வளர்ச்சித் திட்டப்பணிகளை மாவட்ட ஆட்சியர் ஆய்வு

மதுரை, டிச.19-

மதுரை கிழக்கு ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட கூலப்பாண்டி, சத்திரப்பட்டி, கல்லப்பட்டி கிராமங்கள் மற்றும் கோ புதூர் சிப்காட் தொழிற்பேட்டையில் அமைந்துள்ள ஒருங்கிணைந்த வேளாண் விற்பனை வணிக வளாகத்தில் மேற்கொள்ளப்பட்டு வரும் வளர்ச்சித் திட்டப்பணிகளை மாவட்ட ஆட்சித் தலைவர் கே.ஜே.பிரவீன்குமார், இ.ஆ.ப., பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

கோ.புதூர் சிப்காட் தொழிற்பேட்டையில் அமைந்துள்ள ஒருங்கிணைந்த வேளாண் விற்பனை வணிக வளாகத்தில் காலியாக உள்ள வணிக வளாகங்களை ஒதுக்கீடு செய்து செயல்பாட்டுக்கு கொண்டுவர உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டுமென அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.

மேலும் சாகுபடி பரப்பை துல்லியமாக கணக்கிடும் பொருட்டு, மின்னணு முறையில் சாகுபடி பரப்பை பதிவேற்றம் செய்யும் பணி வருடத்தின் காரீப், ராபி மற்றும் கோடை ஆகிய மூன்று பருவங்களிலும் நடைபெற்று வருகிறது. தற்போது நடப்பு



ராபி பருவத்திற்கான கணக்கெடுப்பு பணி மதுரை மாவட்டத்தில் துவங்கியுள்ளது. இப்பதிவேற்றம் செய்யும் பணியினை மாவட்ட ஆட்சியர் அவர்கள் கிழக்கு ஊராட்சி ஒன்றியம் கூலப்பாண்டி மற்றும் சத்திரப்பட்டி ஆகிய வருவாய் கிராமங்களில் கள ஆய்வு மேற்கொண்டார்.

இக்கணக்கெடுப்பு பயிர் விளைச்சல், பயிர் சேதம், சாகுபடி பரப்பிற்கேற்ற மானியங்கள் வழங்குதல், விவசாய கடன்கள் வழங்குதல் ஆகிய பணிகளை வேளாண்மை சார்ந்த துறைகளுடன் ஒருங்கிணைக்கவும் மற்றும் கண்காணிக்கவும் உதவிகரமாக இருக்கும். இப்பணியில் வேளாண்மை உழவர் நலத்துறை களப்பணியாளர்கள், வருவாய்த்துறை அலுவலர்கள், ஊரக வளர்ச்சித்துறை மூலம் தேர்ந்தெடுக்கப்படும் தன்னார்வலர்கள் இணைந்து ஈடுபட உள்ளனர். மதுரை மாவட்டத்தில் மட்டும் 18,57,192 நில உட்பிரிவுகள் உள்ளன. இந்த உட்பிரிவுகளில் தற்போது சாகுபடி செய்யப்பட்டுள்ள பயிர்களின் விவரம் அதற்கென உள்ள செயலி மூலம் மின்னணு முறையில் பதிவேற்றம் செய்யப்பட்டு வருகிறது.

தொடர்ந்து மதுரை கிழக்கு ஊராட்சி ஒன்றியம் கல்லம்பட்டியில் மீன்வளத்துறை மூலமாக அரசின் மானியத்துடன் மீன் வளர்ப்பில் ஈடுபட்டு வரும் புதிய தொழில்முனைவோர் மீன் பண்ணையை பார்வையிட்டு, மீன் வளர்ப்பு, மீன்களின் உணவு முறைகள், விற்பனைகள் மற்றும் செயல்முறைகள் குறித்து அலுவலர்களிடம் மாவட்ட ஆட்சியர் கேட்டறிந்தார்.

இந்த ஆய்வில் மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (வேளாண்மை) சாந்தி வேளாண் மற்றும் மீன்வளத்துறை அலுவலர்கள் உட்பட அரசு அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.

## பெரம்பலூர் பார் அசோசியேஷன் முப்பெரும் விழா வள்ளுவன்நம்பி தலைமையில் நடைபெற்றது

பெரம்பலூர், டிச.19-

பெரம்பலூர் பார் அசோசியேஷன் முப்பெரும் விழா தலைவர் வள்ளுவன்நம்பி தலைமையில் நடைபெற்றது.

பெரம்பலூர் பார் அசோசியேஷன் சங்க ஆண்டு விழா, கிறிஸ்துமஸ் கொண்டாட்டம், 2026 புத்தாண்டு கேக் வெட்டி கொண்டாடும் நிகழ்ச்சி என முப்பெரும் விழா நடைபெற்றது. செயலாளர் சேகர் முன்னிலை வகித்தார். பொருளாளர் சிவராமன் வரவேற்புரை ஆற்றினார்.

சங்கம் கடந்து வந்த பாதை என்னும் தலைப்பில் மூத்த வழக்கறிஞர் வாசுதேவன் சிறப்புரையாற்றினார். கலைநிகழ்ச்சிகளை வழக்கறிஞர் சின்னப்பா தொகுத்து வழங்கினார். இளம் வழக்கறிஞர்கள்




செயலாற்றும் முறையினை மூத்த வழக்கறிஞர் ராதாகிருஷ்ணமூர்த்தி எடுத்துரைத்தார். 2026 ஆம் ஆண்டுக்கான நாள்காட்டியினை வழக்கறிஞர் சேதுபதி சார்பில் சங்கத்திற்கு வழங்கினார். முதன் முதலாக சங்க உறுப்பினர்கள் அனைவருக்கும் நாள்காட்டி வழங்கப்பட்டது.

முப்பெரும் விழாவில் மாவட்ட நீதிமன்ற அரசு வழக்கறிஞர் சந்தானலட்சுமி, அரசு வழக்கறிஞர் செந்தில்நாதன், மகிளா நீதிமன்ற அரசு வழக்கறிஞர் சுந்தரராஜன், அரசு வழக்கறிஞர் புகழேந்தி, சார்பு நீதிமன்ற அரசு வழக்கறிஞர் சிறுவாச்சூர் கோவிந்தராஜ், முன்சீப் கோர்ட் அரசு வழக்கறிஞர் சுரேஷ்குமார் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

நிகழ்ச்சியில் மூத்த வழக்கறிஞர்கள் துரை.பெரியசாமி, செஞ்சேரி அண்ணாதுரை, பாஸ்கர், காமராஜ், ஸ்டாலின், கதிர்.கனகராஜ், சின்னப்பா ஆகியோர் கலந்து கொண்டனர். முடிவில், முப்பெரும் விழா ஒருங்கிணைப்பாளர் வழக்கறிஞர் பேரா.முருகையன் நன்றி கூறினார்*

## திண்டுக்கல் ரெட்டியார்சத்திரம் அட்மா திட்டத்தின் கீழ் வேளாண்மை உதவி இயக்குனர் பழனிச்சாமி அவர்கள் தலைமையில் விவசாயிகள் பயிற்சி

திண்டுக்கல், டிச.19-

திண்டுக்கல் மாவட்டம் ரெட்டியார்சத்திரம் வட்டாரம் அட்மா திட்டத்தின் கீழ் மாவட்டத்திற்கு உள்ளான விவசாயிகள் பயிற்சி ஒருங்கிணைந்த வேளாண் விரிவாக்க மையத்தில் நடைபெற்றது . இது வேளாண்மை உதவி இயக்குனர் பழனிச்சாமி அவர்கள் தலைமையில் கால்நடை உதவி மருத்துவர் சிவக்குமார் அவர்கள் முன்னிலையில் இரண்டு பயிற்சிகள் ஆர் ஏ டி ஐ எஃப் எஸ் திட்டத்தில் நடத்தப்பட்டது. இப் பயிற்சியில் விவசாயிகளுக்கு ஆடு மாடு கோழி வழங்குதல் மீன் வளர்ப்பு பயிர் சாகுபடிமுறை விவசாயிகளுக்கு உதவிகள் பண்ணுதல் ஒருங்கிணைந்த மானாவாரி நில சீர்திருத்தம் செய்தல் மானாவாரி நிலங்களில் நிலையான விவசாயத்தை மேம்படுத்த, ஒருங்கிணைந்த பண்ணைய முறைகளான கால்நடை, மீன்வளம் போன்றவை ஊக்குவிக்கும் மத்திய அரசின்



திட்டம் மூலம் விவசாயிகளுக்கு பயன் அளிக்கும் வகையில் இப் பயிற்சி அளிககப்பட்டது இது விவசாயிகளின் உற்பத்தித்திறனை அதிகரிக்கவும், காலநிலை மாற்ற அபாயங்களைக் குறைக்கவும் உதவுகிறது. மானாவாரிப் பகுதிகளை நிலையான முறையில் மேம்படுத்துதல் மற்றும்

பகுதி அடிப்படையில அணுகுமுறையுடன், ஒருங்கிணைந்த பண்ணைய முறை பயன்படுத்துதல் இத் திட்டம் 201415 முதல் செயல் முறை படுத்தப்படுகிறது. இதில்

முக்கிய அம்சங்கள்:

பன்முகப் பயிரிடுதல் , ஊடுபயிர் சுழற்சிப்பயிரிடுதல், தோட்டக்கலை, கால்நடை வளர்ப்பு, மீன்வளம், தேனீ வளர்ப்பு போன்ற துணைத் தொழில்களை ஒருங்கிணைத்தல் மண் மற்றும் நீர் மேலாண்மை, மண் சுகாதார அட்டை போன்றவற்றிற்கு முக்கியத்துவம் அளித்து

தமிழ்நாட்டில் 28 மாவட்டங்களில் 202425 நிதியாண்டில் ஆர் ஏ டி ஐ எப் எஸ் திட்டத்தின் கீழ் மானியங்கள் வழங்கப்பட்டுள்ளன.

மானியங்கள் தோட்டக்கலை சார்ந் வெர்மி கம்போஸ்ட் அலகுகளுக்கு வரை மானியம் வழங்கப்பட்டது. இப்பயிற்சியில் எம் எஸ் சுவாமிநாதன் ஆராய்ச்சி நிலைய ஆராய்சியாளர் சீனிவாசன் இத்திட்டம் சார்ந்த விளக்கங்களை விவசாயிகளுக்கு மிக சிறப்பாக விளக்கி கூறினார். வேளாண்மை அலுவலர் முருகானந்தம் மற்றும் உதவி வேளாண்மை அலுவலர் முத்துச்சாமி உதவி வேளாண் விற்பனை துறை அலுவலர் மூர்த்தி துணை தோட்டக்கலை அலுவலர் சக்திவேல் மற்றும் அட்மா திட்ட அலுவலர்கள் சுகன்யா உதவி தொழிநுட்ப அலுவலர்கள் பொன் தமிழரசு மற்றும் அருண்குமார் ஆகியோர் கலந்து கொண்டு இந் நிகழ்சியினை சிறப்பாக நடத்தினர்.




## 100 நாள் வேலை திட்டம் பெயர் மாற்றத்துக்கு எதிர்ப்பு; பார்லி வளாகத்தில் எதிர்க்கட்சி எம்பிக்கள் பேரணி

டில்லி, டிச.19-

100 நாள் வேலை திட்டம் பெயர் மாற்றத்தைக் கண்டித்து எதிர்க்கட்சி எம்பி.,க்கள் பார்லி வளாகத்தில் பேரணி நடத்தினர். மஹாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்பு (100 நாள் வேலைத்திட்டம்) உறுதி சட்டத்தை, MVˆ பாரத் ஊரக வாழ்வாதாரம் மற்றும் வேலைவாய்ப்பு உறுதி சட்டம் என பெயர் மாற்றப்பட்டுள்ளது. அதன்படி, 100 வேலை நாட்கள் என்பது, 125 ஆக அதிகரிக்கப்பட்டுள்ளது. மேலும், மத்திய அரசின் நிதி பங்களிப்பிலும் மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

இதற்கான மசோதாவை ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் சிவ்ராஜ்சிங் சவுகான் அறிமுகப்படுத்தினார். திட்டத்தின் பெயர் மாற்றத்துக்கு எதிர்க்கட்சி எம்பிக்கள் கடும் எதிர்ப்பு தெரிவித்தனர். இன்று எதிர்க்கட்சி எம்பி.,க்கள் பார்லி வளாகத்தில் பேரணி நடத்தினர்.பேரணியில், காங்கிரஸ் தலைவர் மல்லிகார்ஜூன கார்கே, திமுக எம்பிக்கள் டி.ஆர். பாலு, கனிமொழி உள்ளிட்ட எதிர்க்கட்சி எம்பிக்கள் பங்கேற்றனர். அப்போது நிருபர்களிடம் காங்கிரஸ் தலைவர் கார்கே கூறியதாவது: மஹாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்பு உறுதித் திட்டத்திற்குப் பெயர் மாற்றுவது மூலம் எங்களால் வழங்கப்பட்ட அந்த உரிமையை பாஜ.,வினர் பறிக்கிறார்கள்.

அவர்கள் மக்களின் உரிமைகளைப் பறிக்கிறார்கள். இது ஒருபெரிய பிரச்னை, இது ஏழைகளுக்கு மிகவும்கடினமானது. எனவே நாங்கள் இதற்காக இறுதிவரை போராடுவோம். நாங்கள் வீதிகளில் போராடுவோம், ஒவ்வொரு மாநிலத்தின் ஒவ்வொரு மாவட்டத்திலும் ஒரு போராட்டம் நடைபெறும். இவ்வாறு கார்கே கூறியுள்ளார்




■ மதுரை மாவட்ட சிறு மற்றும் குறு தொழில் நிறுவனங்கள் சங்கம் (MADITSSIA) சார்பில் இரண்டு நாட்கள் நடைபெறும் அரசு துறை மற்றும் பொதுத்துறை நிறுவனங்களுக்கும் சிறுதொழில் விற்பனையாளர்களுக்கும் இடையே எளிமையான வர்த்தக தொடர்பை மேம்படுத்தும் கண்காட்சியை (MSME CONNECT 2025 – Vendor Development Programme cum Industrial Exhibition) மாவட்ட ஆட்சித் தலைவர் கே.ஜே.பிரவீன்குமார் துவக்கி வைத்து பார்வையிட்டார்

## பொது விநியோக திட்டத்தில் 2.12 கோடி போலி பயனாளிகள் நீக்கம்

புதுடெல்லி:, டிச.19-

பொது விநியோக திட்டத்தில் 2.12 கோடி போலி பயனாளிகள் நீக்கப்பட்டுள்ளதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது.



மக்களவையில் நுகர்வோர் மற்றும் உணவுத் துறை இணையமைச்சர் நிமுபென் ஜெயந்திபாய் பம்பானியா எழுத்து மூலம் அளித்த பதிலில் கூறியிருப்பதாவது: பொது விநியோகத் திட்டத்தில் சந்தேகத்திற்குரிய பயனாளிகள் பட்டியலை மத்திய அரசு தயாரித்தது. இதில் 8.51 கோடி பேர் இடம்பெற்றிருந்தனர். இந்தப் பட்டியல் கள ஆய்வுக்காக மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரேதங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

இந்நிலையில் இந்தப் பட்டியலில் இருந்து இதுவரை 2.12 கோடி போலி பயனாளிகளை மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்கள் நீக்கியுள்ளன. இதன்மூலம் காத்திருப்போர் பட்டியலில் உள்ள தகுதியுள்ள பயனாளிகளுக்கு இடம் கிடைத்துள்ளது. இவ்வாறு அமைச்சர் கூறினார்

## முன்பைவிட வலிமை பெறப்போகும் அமெரிக்கா; நாட்டு மக்களுக்கு சஸ்பென்ஸ் வைத்த டிரம்ப்

வாஷிங்டன், டிச.19-



இன்றிரவு நாட்டு மக்களிடையே உரையாற்ற இருக்கும் அதிபர் டிரம்ப், 'இதுவரை இல்லாத அளவில் அமெரிக்கா வலிமை பெறப்போகிறது,' என்று கூறியுள்ளார். இதனால், அவர் எதைப்பற்றி பேச இருக்கிறார் என்ற எதிர்பார்ப்பு மக்களிடையே எழுந்துள்ளது.ரஷ்யா உக்ரைன் இடையிலான போர் நிறுத்தம், வெனிசுலாவுடனான போர் பதற்றம் உள்ளிட்ட விவகாரங்கள் அமெரிக்க அதிபர் டிரம்ப்பின் முன்னிலையில் உள்ள சவால்களாகும். இந்த சூழலில், இன்றிரவு அவர் நாட்டு மக்களிடம் உரையாற்ற இருக்கிறார். இது தொடர்பாக அவர் செய்தியாளர்களிடம் கூறுகையில், 'இன்றிரவு நான் எதைப்பற்றி உரையாற்றுகிறேன் என்றால், நாம் குழப்பமான மரபைக் கொண்டுள்ளோம். தற்போது, நாங்கள் ஒரு சிறந்த வேலையைச் செய்து முடித்துள்ளோம். இதுவரை இல்லாத அளவுக்கு அமெரிக்கா வலிமைப் பெறப் போகிறது,' எனக் கூறினார். அதிபர் டிரம்ப் எதைப் பற்றி உரை நிகழ்த்தப் போகிறார் என்பது பற்றி வெளிப்படையாக கூறாத நிலையில், வரி விதிப்பு போல ஏதேனும் புதிய அறிவிப்பை வெளியிட இருக்கிறாரா? அல்லது வெனிசுலா பற்றிய அறிவிப்பாக இருக்குமா? என்று மக்கள் விவாதம் நடத்தி வருகின்றனர்.

## "திமுக ஒரு தீய சக்தி; தவெக ஒரு தூய சக்தி" ஈரோட்டில் விஜய் பேச்சு

சென்னை:, டிச,19-



"24 மணி நேரமும் விஜயை எப்படி மடக்கலாம்; தவெகவை எப்படி முடக்கலாம் என்றுதான் நினைக்கிறார்கள். திமுக ஒரு தீயசக்தி. தவெக ஒரு தூயசக்தி" என தவெக தலைவர் விஜய் தெரிவித்துள்ளார்.ஈரோடு மாவட்டத்தில் நடந்த தவெக மக்கள் சந்திப்பு பொதுக்கூட்டத்தில் பேசிய விஜய், "நல்ல காரியங்கள் தொடங்குவதற்கு முன்பு மஞ்சள் வைத்து தான் தொடங்குவார்கள். மங்களகரமான மஞ்சள் விளையும் பூமி தான் ஈரோடு. விவசாயத்துக்கு கவசமாக உள்ளது காளிங்கராயன் அணை. உங்களை நம்பி தான் வந்திருக்கிறேன், வாழ்நாள் முழுவதும் நன்றியோடு இருப்பேன். சூழ்ச்சிக்காரர்களுக்கு தெரியாது, இது 30 வருடங்களுக்கும் மேலாக நீடிக்கின்ற உறவு. பெற்ற தாய் தரும் தைரியத்தை நண்பா, நண்பிகள், தோழர்கள், தோழிகள் தருகிறார்கள்.பெரியார் பெயரை சொல்லி கொள்ளை அடிக்காதீர்கள். நமது அரசியல் எதிரி திமுக; கொள்கை எதிரி பாஜக. தவெக ஒரு பொருட்டில்லை என்றால் ஏன் கதறுகிறீர்கள்?. கொள்ளையடித்து வைத்துள்ள பணம்தான் உங்களுக்குத் துணை; ஆனால் எனக்கு இந்த மாஸ் தான் துணை. களத்தில் உள்ள எதிரிகளை மட்டும் தான் எதிர்ப்போம். களத்தில் இல்லாதவர்களை எதிர்க்க நேரமில்லை.எத்தனை எத்தனை பொய்யான வாக்குறுதிகள். நீட் ரத்து, கல்வி கடன் ரத்து, கேஸ் சிலிண்டர் மானியமாக 100 ரூபாய் கொடுப்போம் என்று அடித்து விட்டார்கள். இன்றுவரை ஏதாவது செய்தார்களா? இவர்கள் எப்போதுமே சொல்வது ஒன்று, செய்வது ஒன்றுதான்24 மணி நேரமும் விஜயை எப்படி மடக்கலாம்; தவெகவை எப்படி முடக்கலாம் என்றுதான் நினைக்கிறார்கள். தனிப்பட்ட முறையில் அசிங்கமாக பேசுவது தான் அரசியல் என்றால் அது எனக்கு வராது. நான் எத்தனை நிமிஷம் பேசினால் என்ன? எப்படி பேசினால் என்ன? விஷயம் என்ன என்று பாருங்கள். நாங்கள் வாயிலேயே வடை சுட திமுகவா... தவெக. திமுக ஒரு தீயசக்தி. தவெக ஒரு தூயசக்தி" இவ்வாறு அவர் தெரிவித்தார்.

## ஜால்ரா அடித்துதான் பதவியில் இருக்க வேண்டும் என்ற அவசியமில்லை; அண்ணாமலை

சென்னை:, டிச.19-



"ஜால்ரா அடித்துதான், ஒரு பதவியில் இருக்க வேண்டும் என்றால் , அந்த பதவி தேவை யில்லை," என, தமிழக பா.ஜ., முன்னாள் தலைவர் அண்ணாமலை தெரிவித்துள்ளார்.சென்னையில், நேற்று அவர் அளித்த பேட்டி: பிரதமர் மோடி, 2014ல் ஆட்சிக்கு வந்ததும், 'தூய்மை இந்தியா' திட்டத்திற்கு, காந்தி பெயரை வைத்தார். அவர், பல இடங்களில், காந்தி பெருமையை உயர்த்தி பிடித்து வருகிறார். தி.மு.க., ஆட்சிக்கு வந்தால், 100 நாள் வேலைவாய்ப்பு திட்டத்தை, 150 நாட்களாக உயர்த்துவோம் என, வாக்குறுதி அளித்தது; இதை தி.மு.க., நிறைவேற்றவில்லை.

இதை கேள்வி கேட்க காங்கிரசுக்கு வக்கில்லை. அண்ணாமலை என்கிற இந்த நாயின் வாலை நிமிர்த்த முடியாது. இது, அப்படி தான் இருக்கும். ஏனெனில், உண்மையை மட்டும் பேசும் நாய். இது, ஜால்ரா அடிக்கிற நாய் கிடையாது. இன்று ஒரு கட்சியில் சேர்ந்து, சினிமா நடிகருக்கு ஜால்ரா அடிக்கிற நாய் கிடையாது. அந்த நாய் வால் கொஞ்சம் வளைந்து தான் இருக்கும். மோடிக்கு, மக்களுக்கு நன்றியுள்ள விசுவாசமான நாய் இது.சினிமா நடிகருக்கு ஜால்ரா அடிக்க, நான் அரசு பதவியை ராஜினாமா செய்யவில்லை. உன்னதமான கோட்பாட்டிற்காக வந்திருக்கிறேன். ஜால்ரா அடித்து தான், ஒரு பதவியில் இருக்க வேண்டும் என்றால், அந்த பதவி எனக்கு தேவை யில்லை. இவ்வாறு அவர் கூறினார்.

## சட்டத்தின் முன் அனைவரும் சமம் ஜெ., வழக்கில் ஐகோர்ட் கருத்து

சென்னை, டிச.19-



'மறைந்த முன்னாள் முதல்வர் ஜெயலலிதா மீதான வருமான வரி வழக்கில், வரி பாக்கியை செலுத்த தயாராக உள்ளோம்' என, சென்னை உயர் நீதிமன்றத்தில், ஜெயலலிதாவின் சட்டப்பூர்வ வாரிசுகளான தீபா, தீபக் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

மறைந்த முன்னாள் முதல்வர் ஜெயலலிதாவுக்கு எதிரான வருமான வரி வழக்கில், 13.69 கோடி ரூபாயை செலுத்தக் கோரி, அவரது சட்டப்பூர்வ வாரிசாக அறிவிக்கப்பட்டுள்ள தீபாவுக்கு, கடந்த ஆக., 11ல் வருமான வரித்துறை நோட்டீஸ் அனுப்பியது. இதை எதிர்த்து, சென்னை உயர் நீதிமன்றத்தில், தீபா தரப்பில் வழக்கு தொடரப்பட்டது.இந்த வழக்கில், மற்றொரு வாரிசான தீபக்கும் சேர்க்கப்பட்டார். இந்த மனு, நீதிபதி சி.சரவணன் முன், நேற்று விசாரணைக்கு வந்தது.

அப்போது மனுதாரர் தீபா தரப்பில், வழக்கறிஞர் எம்.சத்தியகுமார் ஆஜராகி, "வருமான வரிப் பாக்கி 36 கோடி, செல்வ வரி பாக்கி 10 கோடி என, மொத்தம் 46 கோடி ரூபாய் செலுத்தும்படி கூறி, வருமான வரித்துறை நோட்டீஸ் அனுப்பியது.

பின், 36 கோடி ரூபாய் வரி பாக்கி செலுத்த வேண்டும் எனவும், கடைசியாக 13 கோடி ரூபாயும் செலுத்தக் கூறியும் நோட்டீஸ்கள் அனுப்பப்பட்டன. சரியான தொகையை தெரிவித்தால், வரி பாக்கியை செலுத்த தயாராக இருக்கிறோம். மறைந்த முதல்வர் மீதான வழக்கில், வருமான வரித்துறை இவ்வாறு செயல்படுகிறது," என்றார்.

அப்போது குறுக்கிட்ட நீதிபதி, "சட்டத்தின் முன் அனைவரும் சமம்; யாரும் எந்த சிறப்பு சலுகையும் கோர முடியாது," என்றார்.

அதற்கு வருமான வரித்துறை தரப்பில், எவ்வளவு வரி பாக்கி செலுத்த வேண்டும் என்ற கணக்கு விபரங்களை சரி பார்த்து, விளக்கம் அளிக்க அவகாசம் வழங்க வேண்டும் என, அவகாசம் கோரப்பட்டது. இதை ஏற்ற நீதிபதி, விசாரணையை ஜன.,12ம் தேதிக்கு தள்ளி வைத்தார்.

## திருப்பதி தேவஸ்தானத்திற்கு ரூ.1.20 கோடி பிளேடு நன்கொடை

திருமலை, டிச.19-

திருமலை திருப்பதி தேவஸ்தானத்திற்கு ரூ.1.20 கோடி மதிப்புள்ள பிளேடுகளை ஹைதராபாத்தைச் சேர்ந்த தொழிலதிபர் பி.ஸ்ரீதர் நன்கொடையாக வழங்கினார்.ஹைதராபாத்தை சேர்ந்த வெர்ட்டிகல் குளோபல் எனும் நிறுவனத்தின் இயக்குநரான பி.தர் நேற்று திருமலையில் தனது குடும்பத்தாருடன் இணைந்து அறங்காவலர் குழு தலைவர் பி.ஆர்.நாயுடுவை சந்தித்தார். அப்போது ரூ.1.20 கோடி மதிப்புள்ள பிளேடுகளை அவரிடம் ஒப்படைத்தார்.பின்னர் செய்தியாளர்களிடம் பி.ஸ்ரீதர் கூறுகையில், "திருப்பதி ஏழுமலையானுக்கு தினமும் ஆயிரக்கணக்கான பக்தர்கள் தலைமுடி காணிக்கை செலுத்துகின்றனர். இதில் ஒருவருக்கு பாதி பிளேடு வீதம் பயன்படுத்தப்பட்டு வருகிறது. இதற்கு திருப்பதி தேவஸ்தானம் ஆண்டுக்கு ரூ.1.16 கோடி நிதி ஒதுக்கீடு செய்கிறது.இதனால் எனது நிறுவனத்தில் தயாரிக்கப்பட்ட 'சில்வர் மேக்ஸ்' பாதி பிளேடுகளை திருப்பதி தேவஸ்தானத்திற்கு நன்கொடையாக வழங்கி உள்ளேன். உலகிலேயே எனது நிறுவனம் தான் முதன் முதலில் பாதி பிளேடுகளை தயாரித்து விற்பனை செய்கிறது.பாதி பிளேடுகள் விற்பனை அமெரிக்கா, ஐரோப்பா உட்பட 52 நாடுகளில் புகழ்பெற்று விளங்குகிறது. பிரபல '7 ஓ கிளாக்' பிளேடுகளையும் எங்கள் தொழிற்சாலையில் தான் தயாரிக்கிறோம். இவ்வாறு அவர் கூறினார்.

## இந்தியாவில் 7 சதவீத வளர்ச்சி: ஐஎம்எப் கீதா கோபிநாத் கணிப்பு

புதுடெல்லி:, டிச.19-

நடப்பு நிதியாண்டில் இந்தியப் பொருளாதாரம் குறித்து சர்வதேச நாணய நிதியத்தின் (ஐஎம்எப்) முன்னாள் துணை நிர்வாக இயக்குநர் கீதா கோபிநாத் கூறியதாவது:தேசிய புள்ளியியல் அலுவலகம் (என்எஸ்ஓ) ஜூலைசெப்டம்பர் காலாண்டுக்கான பொருளாதார வளர்ச்சி விகிதத்தை 8.2 சதவீதமாக கணித்திருந்தது. ஆனால், அதற்கு முன்னதாகவே இந்தியாவின் வளர்ச்சிக்கான கணிப்பை ஐஎம்எப் வெளியிட்டுவிட்டது. நடப்பு நிதியாண்டைப் பொருத்தவரையில் இந்தியாவின் வளர்ச்சி 7 சதவீதமாக இருக்கும். இது, அக்டோபரில் ஐஎம்எப் கணித்த 6.6 சதவீதத்தை விட அதிகம்.



இந்தியாவால் 20 ஆண்டுகளுக்கு 8 சதவீதத்திற்கு நெருக்கமான வளர்ச்சியை தக்கவைத்துக் கொள்ள முடிந்தால் 2047 இலக்குகளை அடையமுடியும். ஆனால், 20 ஆண்டு காலத்திற்கு தொடர்ச்சியாக 8 சதவீத வளர்ச்சியைத் தக்கவைத்துக்கொள்வது அவ்வளவு எளிதானது அல்ல. அதற்குத் தொடர்ச்சியான சீர்திருத்தங்கள் தேவைப்படும். இவ்வாறு கீதா கோபிநாத் கூறினார்.

## டாக்காவில் இந்திய தூதரகத்துக்கு அச்சுறுத்தல்: வங்கதேச தூதரை அழைத்து மத்திய அரசு கண்டனம்

புதுடெல்லி, டிச.19-

இந்திய தூதரகத்துக்கு பாதுகாப்பு அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளதையடுத்து, வங்கதேச தூதரை அழைத்து மத்திய அரசு கண்டனம் தெரிவித்துள்ளது.




வங்கதேசத்தில் புதிதாக தொடங்கப்பட்ட தேசிய குடிமக்கள் கட்சியின் (என்சிபி) மூத்த தலைவர் ஹஸ்னத் அப்துல்லா, இந்தியாவின் 7 சகோதரிகளை (வடகிழக்கு மாநிலங்கள்) வங்கதேசத்துடன் இணைப்போம் என இரு தினங்களுக்கு முன்பு கூறியிருந்தார்.இந்நிலையில், வங்கதேச தலைநகர் டாக்காவில் உள்ள இந்திய தூதரகத்துக்கு பாதுகாப்பு அச்சுறுத்தலை ஏற்படுத்தும் வகையில் சில தீவிரவாத அமைப்புகள் மிரட்டல் விடுத்துள்ளன.இதையடுத்து, டெல்லியில் உள்ள வங்கதேச தூதர் ரியாஸ் ஹமிதுல்லாவுக்கு நேரில் வருமாறு சம்மன் அனுப்பப்பட்டது. நேரில் ஆஜரான அவரிடம் டாக்காவில் உள்ள இந்திய தூதரகத்துக்கு ஏற்பட்டுள்ள பாதுகாப்பு அச்சுறுத்தல் குறித்து கவலை தெரிவித்ததுடன் கண்டனமும் தெரிவிக்கப்பட்டதுவங்கதேசத்தில் உள்ள இந்திய தூதரகம் மற்றும் அலுவலகங்களின் பாதுகாப்பை இடைக்கால அரசு உறுதி செய்யவேண்டும் என்றும் தெரிவிக்கப்பட்டது. இந்நிலையில் டாக்காவில் உள்ள இந்தியா விசா மையத்தை மத்திய அரசு நேற்று மூடியது.

## தமிழ்நாடு அரசு அலுவலக ஒன்றியத்தின் மாநில மற்றும் மாவட்ட நிர்வாகிகளின் பயிற்சி பட்டறை

தமிழ்நாடு அரசு அலுவலக ஒன்றியத்தின் மாநில மற்றும் மாவட்ட நிர்வாகிகளின் பயிற்சி பட்டறை ஏலகிரியில் வருகின்ற 20,21 சனி, ஞாயிறு ஆகிய இரண்டு நாட்கள் நடைபெறும் கூட்டத்திற்கு மதுரை மாவட்டத்தின் சார்பாக மாவட்ட நிர்வாகிகள், ஒன்றியத்தின் இளைஞரணி, மகளிர் அணி, தகவல் தொழில் நுட்ப அணி, இலக்கிய அணி மற்றும் மாவட்ட முக்கிய நிர்வாகிகள் அனைவரும் கலந்து கொண்டு பயிற்சியினை சிறப்பிக்குமாறு மாவட்ட தலைவர் அ. இளங்கோ தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்..



## மோடி, அமித் ஷா பதவி விலக காங்., கார்கே வலியுறுத்தல்

புதுடில்லி:, டிச.19-

''நேஷனல் ஹெரால்டு வழக்கில், அமலாக்கத் துறையின் குற்றப்பத்திரிகையை டில்லி நீதிமன்றம் நிராகரித்ததை வரவேற்கிறோம். பழிவாங்கும் அரசியலில் ஈடுபடும் பிரதமர் மோடி, மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷா ஆகியோர் உடனடியாக பதவி விலக வேண்டும்,'' என, காங்., தேசிய தலைவர் மல்லிகார்ஜுன கார்கே வலியுறுத்தி உள்ளார்.

'நேஷனல் ஹெரால்டு' வழக்கில், பார்லி., காங்., குழு தலைவர் சோனியா, அவரது மகனும், லோக்சபா எதிர்க்கட்சித் தலைவருமான ராகுல் உள்ளிட்டோருக்கு எதிராக, அமலாக்கத் துறை தாக்கல் செய்த குற்றப்பத்திரிகையை, டில்லி சிறப்பு நீதிமன்றம் நேற்று முன்தினம் நிராகரித்தது.'இந்த வழக்கு தனிநபரால் அளிக்கப்பட்ட புகாரின்படி துவங்கப்பட்டதே தவிர, முறையான முதல் தகவல் அறிக்கையின்படி அல்ல. 'எனவே, பண மோசடி சட்டத்தின் கீழ் இதை விசாரிக்க முடியாது' என, நீதிமன்றம் குறிப்பிட்டது.



இதனால் சோனியா, ராகுல் உள்ளிட்டோர் நிம்மதி அடைந்துள்ளனர். இது குறித்து, டில்லியில் நேற்று, காங்., தலைவர் கார்கே கூறியதாவது: சிறப்பு நீதிமன்றத்தின் தீர்ப்பை வரவேற்கிறோம். உண்மை எப்போதும் வெல்லும். பழிவாங்கும் அரசியலில் ஈடுபடுவதை பிரதமர் மோடியும், உள்துறை அமைச்சர் அமித் ஷாவும் இத்துடன் நிறுத்திக் கொள்ள வேண்டும். இதற்காக அவர்கள் உடனடியாக பதவி விலக வேண்டும்.

இது அவர்கள் முகத்தில் விழுந்த அறை போன்றது. இது போன்ற செயல்களை மக்கள் பொறுத்துக் கொள்ள மாட்டார்கள் என்பதை அவர்கள் அறிய வேண்டும். அரசியல் நோக்கங்களுக்காக மத்திய விசாரணை அமைப்புகள் தவறாக பயன்படுத்தப்படுவதற்கு, முற்றுப்புள்ளி வைக்க வேண்டும். இவ்வாறு அவர் கூறினார்.

# மாநிலங்களின் நிதி நிர்வாகத்தில் வெளிப்படைத்தன்மை தேவை: அமைச்சர் நிர்மலா சீதாராமன் வலியுறுத்தல்



புதுடெல்லி, டிச,19-
நிதி நிர்வாகத்தில் மாநிலங்கள் வெளிப்படைத்தன்மையுடன் நடந்துகொள்ள வேண்டும் என்று மத்திய நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமன் வலியுறுத்தி உள்ளார்.டைம்ஸ் நெட்வொர்க் இந்தியா பொருளாதார மாநாட்டில் கலந்து கொண்ட அவர் இதுகுறித்து கூறியதாவது: நிதி நிர்வாகத்தில் வெளிப்படைத் தன்மைக்காக மத்திய அரசு தெளிவான இலக்குகளை நிர்ணயித்து அதனை சரியாக கடைபிடித்துள்ளது. இதனால் கடன் அளவு குறைந்துள்ளது. இதேபோல் மாநிலங்களும் தங்களது நிதி மேலாண்மையில் வெளிப்படைத் தன்மையுடன் செயல்பட வேண்டும்.அடுத்த நிதியாண்டில் கடன் அளவைக் குறைப்பதிலும் அதிக கவனம் செலுத்தப்படும். வரும் 2047ம் ஆண்டுக்குள் வளர்ந்த நாடாக மாறும் நமது இலக்கை அடைவதற்கு மாநிலங்கள் தங்களது கடன் அளவுகளை குறைக்க வேண்டும்.பட்ஜெட் தயாரிப்பில் வெளிப்படைத்தன்மைக்கு தெளிவான இலக்குகளை மத்திய அரசு வரையறுத்துள்ளது. இதன் மூலம் நிதி மேலாண்மை அனைவருக்கும் தெரியும் வகையிலும், மிக உயர்ந்த பொறுப்புடமையும் உறுதி செய்யப்பட்டுள்ளது. இவ்வாறு அவர் கூறினார்.

# அமெரிக்க வரி சிக்கலுக்கு தீர்வு காண பிரதமருக்கு முதல்வர் ஸ்டாலின் வலியுறுத்தல்



சென்னை, டிச.19-
அமெரிக்க வரி விதிப்பால் தமிழகத்தில் ஏற்றுமதித் துறையில் கடும் பாதிப்பு ஏற்பட்டுள்ளது. இதனை விரைவில் களைய நடவடிக்க வேண்டும் என பிரதமர் மோடிக்கு முதல்வர் ஸ்டாலின் கடிதம் எழுதியுள்ளார்.கடிதத்தில் முதல்வர் ஸ்டாலின் கூறியிருப்பதாவது: அமெரிக்க வரிவிதிப்பால் திருப்பூர், கோவை, ஈரோடு மற்றும் கரூர் ஆகிய ஊர்களின் ஏற்றுமதித் துறைகளில் கடும் நெருக்கடி ஏற்பட்டுள்ளது. வேலூர், ராணிப்பேட்டை மற்றும் திருப்பத்தூரில் உள்ள காலணி உற்பத்தி நிறுவனங்களிலும் இதேபோன்ற மோசமான சூழ்நிலை காணப்படுகிறது. இதன் காரணமாக, லட்சக்கணக்கான வேலைவாய்ப்புகள், குறிப்பாக பெண்களுக்கான வேலைவாய்ப்புகள் பறிபோகும் நிலை உள்ளது. இருதரப்பு ஒப்பந்தம் மூலம் இந்த வரிச் சிக்கலை விரைவில் தீர்ப்பதற்கு முன்னுரிமை அளித்திடுமாறு கேட்டுக்கொள்கிறேன்.


அமெரிக்க வரி விதிப்பால் தமிழகத்தில் ஏற்றுமதித் துறையில் கடும் பாதிப்பு ஏற்பட்டுள்ளது. இதனை விரைவில் களைய நடவடிக்க வேண்டும். இவ்வாறு முதல்வர் ஸ்டாலின் கூறியுள்ளார்.ரஷ்யாவிடம் இருந்து பெட்ரோலியம் வாங்குவதற்கு எதிர்ப்பு தெரிவித்து அமெரிக்கா இந்தியா பொருட்கள் மீதான இறக்குமதி வரியை 50 சதவீதமாக உயர்த்தி உள்ளது. இதனால் ஜவுளி துறை கடுமையான பாதிப்பை எதிர்கொண்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது

# சுங்கச்சாவடிகளில் ஏஐ., தொழில்நுட்பத்தில் கட்டண வசூல்; 2026ல் அமலுக்கு வரும்




புதுடில்லி, டிச.19-
வரும் 2026ம் ஆண்டு இறுதிக்குள் நாடு முழுவதிலும் செயற்கை நுண்ணறிவு (ஏஐ தொழில்நுட்பம்) அடிப்படையிலான டிஜிட்டல் கட்டண வசூல் தொழில் நுட்பத்தை அரசு அறிமுகப்படுத்த உள்ளதாக மத்திய அமைச்சர் நிதின் கட்கரி தெரிவித்துள்ளார்.இது குறித்து அவர் கூறி இருப்பதாவது: பலவழிப் பாதை தடையற்ற சுங்கச்சாவடி அமைப்பு (விலிதிதி) மற்றும் செயற்கை நுண்ணறிவு அடிப்படையிலான தொழில்நுட்பம் 2026 ஆம் ஆண்டு இறுதிக்குள் நாடு முழுவதும் செயல்படுத்தப்படும். இது பயணிகளுக்கு சுங்கச்சாவடிகளில் காத்திருக்கும் நேரத்தை முற்றிலுமாக நீக்கும்.இந்தபுதிய தொழில்நுட்பம் முற்றிலும் செயற்கை நுண்ணறிவு அடிப்படையிலானது, இது வாகனங்கள் சுங்கச்சாவடிகளில் எந்தவித காத்திருப்பும் இன்றி கடந்து செல்ல அனுமதிக்கும். இந்த முயற்சியால் ஆண்டுதோறும் சுமார் ரூ.1,500 கோடி மதிப்புள்ள எரிபொருளைச் சேமிக்க உதவும். அதே நேரத்தில் அரசாங்கத்தின் வருவாயை சுமார் ரூ.6,000 கோடி அதிகரிக்கும்.முன்னதாக, சுங்கச்சாவடியில் பணம் செலுத்த 3 முதல் 10 நிமிடங்கள் வரை ஆனது.பின்னர், ஃபாஸ்டேக் காரணமாக, அந்த நேரம் 60 வினாடிகளாக குறைந்துள்ளது. இதனால் அரசின் வருமானம் ரூ.5,000 கோடி அதிகரித்துள்ளது. ஃபாஸ்டேக்கிற்குப் பதிலாக விலிதிதி வந்த பிறகு, கார்கள் மணிக்கு அதிகபட்சம் 80 கி.மீ வேகத்தில் சுங்கச்சாவடியைக் கடக்க முடியும்.மேலும் சுங்கச்சாவடிகளில் காத்திருக்கும் நேரத்தை பூஜ்ஜிய நிமிடங்களாக மாற்றுவதே எங்களின் குறிக்கோளாகும். 2026 ஆம் ஆண்டுக்குள் இந்த வேலை முடிந்து விடும். இவ்வாறு அமைச்சர் தெரிவித்து உள்ளார்.

# ஜெர்மனியில் பிஎம்டபிள்யூ நிறுவனத்தின் உற்பத்தி ஆலையை பார்வையிட்ட ராகுல் காந்தி



முனிச், டிச.19-
ஜெர்மனியில் உள்ள பிஎம்டபிள்யூ நிறுவனத்தின் உற்பத்தி தொழிற்சாலையை, மக்களவை எதிர்க்கட்சித் தலைவர் ராகுல் காந்தி நேற்று பார்வையிட்டார்.

காங்கிரஸ் மூத்த தலைவரும் மக்களவை எதிர்க்கட்சித் தலைவருமான ராகுல் காந்தி, ஜெர்மனியின் முனிச் நகரில் சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ளார்.

இந்நிலையில், பிஎம்டபிள்யூ நிறுவனத்தின் தொழிற்சாலையை அவர் பார்வையிட்டார். அந்நிறுவனத்தின் எம்.சீரிஸ் வாகனங்கள், மின்சார மோட்டார் சைக்கிள்கள், பிஎம்டபிள்யூ ஐஎக்ஸ்3, ரோல்ஸ் ராய்ஸ் உட்பட பல்வேறு புதிய மாடல் வாகனங்களைப் பார்வையிட்டார்.மேலும், தமிழகத்தின் ஒசூரில் டிவிஎஸ் நிறுவனத்துடன் இணைந்து பிஎம்டபிள்யூ நிறுவனம், பிஎம்டபிள்யூ ஜி450ஜிஎஸ் என்ற புதிய மோட்டார் சைக்கிளை தயாரித்துள்ளது. இந்த மோட்டார் சைக்கிள் இந்தியாவில் இன்னும் அறிமுகம் செய்யப்படவில்லை. இதில் ராகுல் காந்தி அமர்ந்து அதன் சிறப்பம்சங்கள் குறித்து கேட்டறிந்தார். பின்னர் பிஎம்டபிள்யூ காரில் அமர்ந்தும், அதன் சிறப்பம்சங்கள் குறித்து ராகுல் காந்தி கேட்டறிந்தார்.

# அரசியல், பண பலத்தால் ஆட்டம் போடும் மணல் கொள்ளை கும்பல்: ஐகோர்ட் கண்டனம்



சென்னை, டிச.19-
அரசியல், பண பலத்தை வைத்து, மணல் கொள்ளை கும்பல், 'மாபியா' போல் செயல்படுவதாக சென்னை உயர் நீதிமன்றம் கண்டனம் தெரிவித்துள்ளது. தர்மபுரி மாவட்டம், நல்லம்பள்ளியைச் சேர்ந்தவர் நடேசன்; நெக்குந்தி கிராமத்தில் உள்ள ஆக்கிரமிப்புகளை அகற்ற உத்தரவிட கோரி, சென்னை உயர் நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்தார்.ஜி.பி.எஸ்., கருவி இதை விசாரித்த உயர் நீதிமன்றம், சட்டவிரோத மணல் மற்றும் கனிமவளங்கள் கொள்ளையை தடுக்க எடுக்கப்பட்ட நடவடிக்கை குறித்து, புவியியல் மற்றும் சுரங்கத்துறை இயக்குநர் அறிக்கை தாக்கல் செய்ய உத்தரவிட்டிருந்தது.இந்த வழக்கு, நீதிபதிகள் எஸ்.எம்.சுப்பிரமணியம், சி.குமரப்பன் அடங்கிய அமர்வில் நேற்று மீண்டும் விசாரணைக்கு வந்தது. அப்போது, சுரங்கத் துறை இயக்குநர் மோகன் சார்பில்அறிக்கை தாக்கல் செய்யப்பட்டது. அதில், 'மணல் உள்ளிட்ட கனிமவளங்களை ஏற்றிச் செல்லும் லாரிகளுக்கு, ஜி.பி.எஸ்., கருவி பொருத்துவது கட்டாயமாக்கப்பட்டு உள்ளது. இப்பணிகள் அடுத்தாண்டு மார்ச் 31ம் தேதிக்குள் நிறைவு பெறும்.கடந்த 2020 முதல், 2025ம் ஆண்டு நவம்பர் வரை மொத்தம் 1,439 சட்ட விரோத குவாரிகள் கண்டறியப்பட்டு உள்ளன. இவை தொடர்பாக, 135 வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளன' என குறிப்பிடப்பட்டிருந்தது.

மணல் கொள்ளையை தடுப்பது கலெக்டர்களின் பொறுப்பு: சென்னை ஐகோர்ட் அப்போது நீதிபதிகள், 'எத்தனை வழக்குகளில் தண்டனை விதிக்கப்பட்டு உள்ளது என்பது உள்ளிட்ட விபரங்களை ஏன் தாக்கல் செய்யவில்லை? சட்ட விரோதமாக 5 கோடி ரூபாய்க்கு கனிமவளம் கொள்ளை அடிக்கப்படும் நிலையில், 5 லட்சம் ரூபாய் அபராதம் விதிப்பதில் என்ன பயன் இருக்கிறது' என, கேள்வி எழுப்பினர்.

இதையடுத்து, நீதிபதிகள் கூறியதாவது:அரசியல், பண பலத்தை வைத்து, கனிமவள கொள்ளை கும்பல், 'மாபியா' போல் செயல்படுகிறது. மணல், கனிமவள கொள்ளையை தடுப்பது, சம்பந்தப்பட்ட கலெக்டர்களின் பொறுப்பு. இது தொடர்பாக புகார் அளிக்காத வருவாய் துறை அதிகாரிகள் மீது, கலெக்டர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும்.திடீர் ஆய்வு மணல் மற்றும் கனிமவள கொள்ளை குறித்து புகார் அளிக்கும் சமூக ஆர்வலர்கள், பத்திரிகையாளர்களுக்கு போலீசார் பாதுகாப்பு அளிக்க வேண்டும். அரசின் அறிக்கை ஏற்றுக்கொள்ளக்கூடியதாக இருந்தாலும், இதை முழுமையாக அமல்படுத்த வேண்டும். சட்ட விரோத மணல் மற்றும் கனிமவள கொள்ளையை தடுக்க, அதிகாரிகள் திடீர் ஆய்வுகளை நடத்த வேண்டும்.இவ்வாறு உத்தரவிட்ட நீதிபதிகள், வழக்கை முடித்து வைத்தனர்.



# வழக்கத்தில் இல்லாத 71 சட்டங்களை ரத்து, திருத்தம் செய்யும் மசோதா நிறைவேற்றம்

புதுடெல்லி, டிச.19-
வழக்கத்தில் இல்லாத 71 சட்டங்களை ரத்து செய்வது அல்லது திருத்துவது தொடர்பான மசோதா நாடாளுமன்றத்தில் நேற்று நிறைவேறியது.நாடாளுமன்ற மக்களவையில் ரத்து மற்றும் திருத்த மசோதா 2025 கடந்த திங்கள்கிழமை தாக்கல் செய்யப்பட்டது. வழக்கத்தில் இல்லாத அல்லது காலாவதியான 71 சட்டங்களை ரத்து செய்ய அல்லது திருத்தம் செய்ய இது வகை செய்கிறது.குறிப்பாக, இந்திய டிராம்வேஸ் சட்டம் 1986, சர்க்கரை விலை சமநிலைப் படுத்தல் நிதி சட்டம் 1976, பாரத் பெட்ரோலியம் கார்ப்பரேஷன் சட்டம் 1988 உள்ளிட்டவற்றை ரத்து செய்ய இந்த மசோதா வகை செய்கிறது.இந்த மசோதா விவாதத்துக்குப் பிறகு மக்களவையில் நேற்று முன்தினம் நிறைவேற்றப்பட்டது. இந்நிலையில் இந்த மசோதா மாநிலங்களவையில் நேற்று நிறைவேறியது. காப்பீடு மசோதா: காப்பீட்டுத் துறையில் 74 சதவீதமாக உள்ள அந்நிய நேரடி முதலீட்டை 100% ஆக அதிகரிக்க வகை செய்யும் சப்கா பீமா சப்கி ரக்சா (காப்பீட்டுச் சட்டங்கள் திருத்தம்) மசோதா 2025, மக்களவையில் நேற்று முன்தினம் நிறைவேற்றப்பட்டது. இந்நிலையில், இந்த மசோதா மாநிலங்களவையில் நேற்று குரல் வாக்கு மூலம் நிறைவேறியது. இதையடுத்து இந்த மசோதா குடியரசுத் தலைவரின் ஒப்புதலுக்கு அனுப்பி வைக்கப்பட உள்ளது.

# பனையூர் பார்ட்டியில் உள்ளடி அரசியல் | உள்குத்து உளவாளி



பனையூர்,டிச.19-
பனையூர் பார்ட்டியில் இப்பவே உள்ளடி அரசியல் உச்சமெடுத்து ஆடுகிறதாம். இதுநாள் வரைக்கும் தன்னைத் தாண்டி யாரையும் தலைவரைப் பார்க்கவிடாமல் 'பக்காவாக'ப் பார்த்துக் கொண்டாராம் கட்சியின் 'மகிழ்ச்சி' மனிதர்.

ஆனால், தலைவரின் நண்பரும் மெத்தப் படித்தவருமான 'ராஜப்' புள்ளி உள்ளே வந்த பிறகு அந்தக் கட்டுக்கோப்பு கலைந்து போனதாம். எதுவாக இருந்தாலும் 'ராஜப்' புள்ளி நேரடியாக தலைவரிடமே ஒன் டு ஒன் பேசிவிடுகிறாராம். இதனால் கட்சிக்குள் நடக்கும் பல விஷயங்கள் 'மகிழ்ச்சி' மனிதருக்கு லேட்டாகத்தான் தெரியவருகிறதாம்.

தலைவரின் பிறந்த நாளை வட மாவட்டம் ஒன்றில் மன்றத்தினரை வைத்து அமரக்களமாக நடத்தி முடித்தாராம் 'ராஜப்' புள்ளி. இந்த விஷயம் லேட்டாக தனது காதுக்கு வந்ததும், தன்னைக் கேட்காமல் யாரும் எதுவும் செய்யக் கூடாது என்று மன்றத்தினருக்கு அணைபோட்டு வைத்தாராம் 'மகிழ்ச்சி' மனிதர்.

இந்த நிலையில், பார்டர் தேசத்தில் அண்மையில் தலைவர் கலந்து கொண்ட பொதுக்கூட்டத்தின் போது 'ராஜப்' புள்ளியின் காரை திடலுக்குள் விட போலீஸார் மறுத்து விட்டார்களாம். உடனே, 'மகிழ்ச்சி' மனிதருக்கு போன் அடித்தாராம். அவர் போனை எடுக்கவில்லையாம்.

உடனே, அவருக்கு பக்கத்தில் இருந்த இன்னொரு நபருக்கு போன் அடித்தாராம் 'ராஜப்' புள்ளி. "நீங்கள் போன் அடித்ததை 'மகிழ்ச்சி' கவனித்துவிட்டுத்தான் போனை எடுக்காமல் இருக்கிறார்" என்று போட்டுக் கொடுத்துவிட்டாராம் அந்த நபர்.

இதனால், வேறு வழியில்லாமல் பொதுக்கூட்ட திடலுக்குள்ளேயே போக முடியாமல் திரும்பிவிட்ட 'ராஜப்' புள்ளி, "என்னால் தனக்கு சிக்கல் வருமோ என நினைத்துக்கொண்டு எனக்கு இப்படி எல்லாம் இடைஞ்சல் செய்கிறார்" என்று 'மகிழ்ச்சி' மனிதர் குறித்து தனக்கு நெருக்கமான வட்டாரத்தில் புலம்பி வருகிறாராம்.

# அன்புமணி மீதான ஊழல் வழக்கை சிபிஐ விரைந்து விசாரிக்க வேண்டும்: பாமக நிர்வாகக் குழுவில் தீர்மானம்



சென்னை, டிச.19-
நிலுவையில் உள்ள அன்புமணி மீதான ஊழல் வழக்கு மற்றும் தேர்தல் ஆணையத்தில் போலி ஆவணங்களை சமர்ப்பித்து மோசடி செய்தது குறித்து சிபிஐ விரைந்து விசாரிக்க வேண்டும் என பாமக நிர்வாகக் குழுவில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

பாமக நிர்வாகக் குழுக் கூட்டம் திண்டிவனத்தை அடுத்த தைலாபுரத்தில் நேற்று நடைபெற்றது. கட்சியின் நிறுவனர் ராமதாஸ் தலைமை வகித்தார். கவுரவத் தலைவர் ஜி.கே. மணி, செயல் தலைவர் காந்தி, இணைப் பொதுச்செயலாளர் எம்எல்ஏ அருள் மற்றும் நிர்வாகக் குழு உறுப்பினர்கள் பங்கேற்றனர்.கூட்டத்தில், 'சட்டப் பேரவைத் தேர்தலில் கூட்டணி குறித்து பேசுவதற்கு ராமதாஸுக்கு முழு அதிகாரம் அளிப்பது, தலையணை மந்திரத்தால் தலைக்கு பித்தம் ஏறி அலையும் அன்புமணி, தலையணை மந்திரத்தில் இருந்து முற்றிலும் விடுபடவில்லை என்றால் அவமானங்களையும், கேவலங்களையும் சந்திக்க நேரிடும் என எச்சரிப்பது, தம்பி மற்றும் சம்பந்தி என்ற உறவை விட அப்பா முக்கியம் என நினைத்து தந்தையை தலை நிமிரச் செய்துள்ள செயல் தலைவர் காந்திக்கு பாராட்டு மற்றும் நன்றி தெரிவிப்பது, நிலுவையில் உள்ள அன்புமணி மீதான ஊழல் வழக்கு மற்றும் தேர்தல் ஆணையத்தில் போலி ஆவணங்களை சமர்ப்பித்து மோசடி செய்தது குறித்து சிபிஐ விரைந்து விசாரிக்க வேண்டும்' என்பது உள்ளிட்ட 13 தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.கூட்டத்துக்கு பிறகு செய்தியாளர்களிடம் பேசிய ராமதாஸ் கூறியதாவது: பாமக தலைவர் உட்பட பல்வேறு பதவிகளை அன்புமணிக்கு கொடுத்து அழகு பார்த்தோம். ஆனால் அவர், தீட்டிய மரத்தில் கூர் பார்க்கிறார். நான் கஷ்டப்பட்டு உருவாக்கிய பாமக எனும் ஆலமரத்தின் ஒரு கிளையில் கோடாரி செய்து, நுனி கிளையில் உட்கார்ந்து கொண்டு அந்த ஆலமரத்தை வெட்ட ஆரம்பித்து இருக்கிறார். டெல்லி உயர் நீதிமன்றமும் தேர்தல் ஆணையமும் எங்களுக்குச் சாதகமாக தீர்ப்பு வழங்கியும் கூட தேர்தலில் போட்டியிட விருப்ப மனுக்களை வாங்குவது, ஊர்வலம் செல்வது, கூட்டம் நடத்துவது போன்ற செயல்களில் ஈடுபட்டு வருகிறார் அன்புமணி. என் பெயர், புகைப்படம் மற்றும் பாமக கொடியை அவர் பயன்படுத்துவதை வன்மையாகக் கண்டிக்கிறேன். அன்புமணியின் செயலுக்கு நிர்வாகக் குழுவிலும் கண்டனம் தெரிவிக்கப்பட்டுள்ளது.கூட்டணி குறித்து பேச்சுவார்த்தை நடத்த பாமக நிர்வாகக் குழு, எனக்கு முழு அதிகாரம் கொடுத்துள்ளது. இதேபோல் செயற்குழுவும், பொதுக்குழுவும் எனக்கு அதிகாரம் வழங்கும். நாங்கள் ஜனநாயக முறைப்படி கட்சியை நடத்தி வருகிறோம். பொய்யர்கள் இத்துடன் நிறுத்திக் கொள்ள வேண்டும். கட்சிக்கும் உங்களுக்கும் எந்தத் தொடர்பும் இல்லை. விபரீத விளையாட்டு வேண்டாம்.போலி ஆவணங்களை கொடுத்து தேர்தல் ஆணையத்தை அன்புமணி ஏமாற்றி உள்ளார். இந்த விஷயத்தில் தேர்தல் ஆணையம் முதலில் தவறு செய்துள்ளது. டெல்லி உயர் நீதிமன்றம் எங்களுக்கு சாதகமாக தீர்ப்பு வழங்கி உள்ளது. தவறைப் புரிந்து கொண்ட தேர்தல் ஆணையம் பின்னர், சரியான தீர்ப்பை வழங்கி உள்ளது. இறுதி வெற்றி எங்களுக்குதான். தீர்ப்பு தெளிவாக இருப்பதால், சிவில் நீதிமன்றத்துக்குச் செல்ல வேண்டிய அவசியமில்லை. பாமகவின் சட்ட விதிகளின்படி, கட்சி என்னிடமே உள்ளது. இவ்வாறு அவர் கூறினார்




## எஸ்.டி.பி.ஐ. கட்சி திருப்பூர் வடக்கு மாவட்ட செயற்குழு கூட்டம் செயற்குழு கூட்டம்

திருப்பூர், டிச.19-

எஸ்.டி.பி.ஐ கட்சியின் திருப்பூர் வடக்கு மாவட்ட செயற்குழு கூட்டம் மாவட்ட தலைவர் பஷீர் அகமது தலைமையில் மாவட்ட செயற்குழு உறுப்பினர் பாபு வரவேற்புரையில் மாவட்ட பொதுச் செயலாளர் அப்துல் வஹாப் தொகுத்து வழங்கி செயற்குழு கூட்டம் நடைபெற்றது. இந்த கூட்டத்திற்கு நன்றி உரை மாவட்ட செயற்குழு உறுப்பினர் முகமது யாசின் முன்னிலை மாவட்ட துணைத் தலைவர் ஜாபர் சாதிக். மாவட்ட பொருளாளர் ஜாபிர் அஹமது. மாவட்டச் செயலாளர்கள் இதயத்துல்லா.அக்பர் அலி. மாவட்ட செயற்குழு உறுப்பினர் திப்புசுல்தான். வழக்கறிஞர் அணி மாவட்ட பொறுப்பாளர் பைஜ். தெற்கு தொகுதி தலைவர் அன்வர். காங்கேயம் தொகுதி தலைவர் சாதிக் பாஷா. காங்கேயம் தொகுதி செயலாளர் காலித். உள்ளிட்ட முக்கிய நிர்வாகிகள் பங்கேற்றனர் இதில் பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன அதில் காங்கேயம் ரோடு சிடிசி கார்னர் பகுதியில் விபத்துகளை தடுக்கும் விதத்தில் வேகத்தடை அமைக்க வேண்டும். மாநகராட்சி சாலை மற்றும் வீடு அருகே கொட்டப்பட்டுள்ள குப்பைகளை அகற்ற வேண்டும். விமன்ஸ் இந்தியா மூவ்மெண்ட் சார்பாக மதுரையில் நடைபெறும் மாநாட்டில் பெருந்திரளாக பங்கேற்பது மேலும் டிசம்பர் 6 திருப்பூரில் நடைபெற்ற மாநாட்டில் பெருந்திரளாக பங்கேற்ற அனைவருக்கும் நன்றி தெரிவிப்பது உள்ளிட்ட பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன...

## சேலத்தில் தனியார் துறை வேலை வாய்ப்பு முகாம்

சேலம், டிச.19-

சேலம் மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகத்தில் தனியார் துறை வேலைவாய்ப்பு முகாம்19ம் தேதி நடைபெற உள்ளதாக அறிவிப்பு ..

சேலம் கோரிமேட்டில் உள்ள மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டு மையத்தில், வேலைவாய்ப் பற்ற இளைஞர்கள் பயன் பெறும் வகையில், ஒவ்வொரு மாதத்திலும் 3வது வெள்ளிக்கிழமை தனியார் துறை வேலைவாய்ப்பு முகாம் நடத்தப்படுகிறது.

அதன்படி, மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகத்தில் வரும் 19ம்



தேதி தனியார்துறை வேலைவாய்ப்பு முகாம் நடக்கிறது.இம்முகாமில் உற்பத்தி, தகவல் தொடர்பு,தொழில்நுட்பம், ஜவுளி, வங்கி, சேவைகள், காப்பீடு, மருத்துவம், கட்டுமானம், நிதி நிதி உள்ளிட்ட முக்கிய துறைகளை சேர்ந்தவர்கள் கலந்து கொண்டு, தங்களுக்கு தேவையான பணியாளர்களை தேர்வு செய்ய உள்ளனர். 8, 10, 12ம் வகுப்பு தேர்ச்சி பெற்றவர் கள்,பட்டம், பட்டமேற்ப டிப்பு,ஐடிஐ, டிப்ளமோ, பொறியியல், செவிலியர், ஆசிரியர், சட்டம், விவசாயம் உள்ளிட்ட அனைத்து விதமான கல்வி தகுதியை கொண்டவர்கள்.இந்த முகாமில் கலந்து கொள்ளலாம்.

காலை 10 மணிக்கு தொடங்கி மதியம் 3 மணி வரை முகாம் நடைபெற உள்ளது.இது குறித்த மேலும் விவரங்களுக்கு 9788880929



■ திருப்பூர் புறநகர் மேற்கு மாவட்ட கழக செயலாளரும் உடுமலை சட்டமன்ற உறுப்பினருமான உடுமலை ராதாகிருஷ்ணன் பிறந்தநாள் விழாவில் மாவட்ட வர்த்தக அணி செயலாளர் உதயகுமார், சசிகுமார் உடுமலை எம்எல்ஏ ராதாகிருஷ்ணன் அவர்களுக்கு ஆள் உயர மலர் மாலை அணிவித்து, மலர் கிரீடம் சூடி, வெற்றிவாள் வழங்கி பிறந்தநாள் கேக் வெட்டி கழக நிர்வாகிகள் கொண்டாடினார்கள் உடன் நகரக் கழக துணைச் செயலாளர் சரண்யாதேவி, நகர மன்ற உறுப்பினர் சகுந்தலா, வனிதாமணி முன்னாள் நகர மன்ற உறுப்பினர், மற்றும் கழக நிர்வாகிகள் பிறந்தநாள் விழாவில் கலந்து கொண்டனர்

# அதிமுக முன்னாள் எம்.பி. சௌந்தரராஜன் ராதாபுரம் தொகுதியில் போட்டியிட விருப்ப மனு

ராதாபுரம், டிச.19-

ராதாபுரம் சட்டமன்ற போட்டியிட தொகுதியில் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும், நெல்லை அதிமுக புறநகர் மாவட்ட கழக பொருளாளருமான சௌந்தரராஜன் அதிமுக தலைமை கழகத்தில் விருப்ப மனு வழங்கினார்.

அதிமுக பொதுச்செயலாளர் எடப்பாடி கே.பழனிசாமி தலைமையில் மக்களாட்சி மலர்ந்திட வேண்டும் என்பதற்காக, சென்னை ராயப்பேட்டை அதிமுக தலைமை கழக அலுவலகத்தில் பல்வேறு மாவட்டங்களை சேர்ந்த அதிமுக நிர்வாகிகள் விருப்ப மனு வழங்கி வருகின்றனர். ராதாபுரம் சட்டப்பேரவைத்



தொகுதியில் போட்டியிட விருப்பம் தெரிவித்து, திருநெல்வேலி புறநகர் மாவட்ட கழகப் பொருளாளரும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான சௌந்தர்ராஜன் அதிமுக தலைமைக் கழகத்தில் கழக முன்னாள் அமைச்சர்கள் OS. மணியன், தளவாய் சுந்தரம், வைகை செல்வன் ஆகியோரிடம் விருப்ப மனுவை சமர்ப்பித்தார். இந்த நிகழ்ச்சியில் முன்னாள் அமைச்சர் வி.எம்.ராஜலட்சுமி, கழக அமைப்புச் செயலாளர் ஏ.கே.சீனிவாசன், மாநில அம்மா பேரவை துணைச் செயலாளர் S.மைக்கேல் ராயப்பன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

மேலும் இந்த நிகழ்வில் ராதாபுரம் மேற்கு ஒன்றிய கழகச் செயலாளர் அந்தோணி அமலராஜா, ராதாபுரம் கிழக்கு ஒன்றிய கழக செயலாளர் K.P.K.செல்வராஜ், வள்ளியூர் தெற்கு ஒன்றிய கழக செயலாளர் பால்துரை வள்ளியூர் வடக்கு ஒன்றிய கழகச் செயலாளர் லாசர் திசையன்விளை பேரூர் கழகச் செயலாளர் ஜெயக்குமார் பணகுடி பேரூர் கழகச் செயலாளர் லாரன்ஸ் உட்பட பலர் கலந்து கொண்டனர்.




## காவேரி மருந்தியல் கல்லூரி சார்பில் தடுப்பூசி விழிப்புணர்வு பேரணி

மேச்சேரி, டிச.19-

அறுபத்தி நான்காவது தேசிய மருந்தாளுனர் வார விழாவை ஒட்டி, மேச்சேரி தி காவேரி மருந்தியல் கல்லூரி சார்பில், மக்கள் இடையே தடுப்பூசி குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்த, மேட்டூர் அணையில் பேரணியை நடத்தியது. காவேரி கல்வி நிறுவன செயலர் இளங்கோவன் தொடங்கி வைத்தார்.

மேட்டூர் டி.எஸ்.பி., ஆரோக்கிய ராஜ், முதன்மை விருந்தினராகவும், இன்ஸ்பெக்டர் அம்சவள்ளி சிறப்பு விருந்தினராகவும் பங்கேற்றனர். அதில் தடுப்பூசியின் முக்கியத்துவம், நோய் தடுப்பு, பொது சுகாதாரத்தில் மருந்தாளுனர்களின் பங்கு குறித்து பதாகைகள் ஏந்தி, கல்லூரி மாணவ, மாணவியர், பேராசிரியர்கள், பேரணியாக சென்று, மக்களிடம் விழிப்புணர்வு ஏற்படுத்தினர்.

மேலும் தேசிய தடுப்பூசி திட்டங்களுக்கு ஆதரவு வழங்குவதிலும், சமூக ஆரோக்கியத்தை பாதுகாப்பதிலும் மருந்தாளுனர்களின் பங்கு முக்கியம் என்பதை வலியுறுத்தினர். கல்லுரி முதல்வர் சுரேஷ், புல முதன்மையர் நந்தகுமார் உள்பட பலர் பங்கேற்றனர்.



■ திண்டுக்கல் மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் தமிழ்நாடு ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி துறை அனைத்து ஓய்வூதியர்கள் சங்கம் சார்பில் பல்வேறு அம்ச கோரிக்கைகளை வலியுறுத்தி கவன ஈர்ப்பு ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.



## சேலத்தில் வைகுண்ட ஏகாதசி ஆன்லைனில் பதிவு செய்யலாம்

சேலம், டிச.19-

சேலத்தில் வைகுண்ட ஏகாதசியை முன்னிட்டு சேலம் கோட்டை அழகிரிநாதர் சுவாமி கோயிலில் வரும் 30ம் தேதி சொர்க்கவாசல் திறப்பு நிகழ்ச்சி நடைபெறவுள்ளது. இதற்கான ஆன்லைன் முன்பதிவு தற்போது தொடங்கியுள்ளது.

சேலம் கோட்டை அழகிரிநாதர் கோயிலில் ஒவ்வொரு ஆண்டும் வைகுண்ட ஏகாதசி சொர்க்கவாசல் திறப்பு விழா நடக்கும்.அதன்படி,நடப்பாண்டு சொர்க்க வாசல் திறப்பு விழாவை முன்னிட்டு வரும் 19ம் தேதி முதல் 29ம் தேதி வரை பகல்பத்து உற்சவம் நடக்கிறது.

வைகுண்ட ஏகாதசி முன்னிட்டு கோட்டை பெருமாள் கோவிலில் சிறப்பு நுழைவு கட்டணமாக ஒரு நபருக்கு ரூபாய் 22 ஆன்லைனில் செலுத்தி முன்பதிவு செய்து கொள்ளலாம் என கோவில் நிர்வாகம் சார்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. https://tnhrce.gov.in என்ற இணையதளத்தில் முப்பதாம் தேதி வரை முன்பதிவு செய்யலாம். வரும் டிசம்பர் 30ஆம் தேதி அதிகாலை 5 மணிக்கு சொர்க்கவாசல் திறப்பு விழா நடைபெற உள்ளது.

## திருப்பூரில் தமிழ்நாடு மாசு கட்டுபாடு வாரியம் சார்யில் மாவட்ட ஆட்சியர் தலைமையில் பணிக்குழு மற்றும் ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டம்

திருப்பூர், டிச.19-

மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர். மனிஷ் நாரணவரே அவர்கள் தெரிவித்தாதவது, தடைசெய்யப்பட்ட ஒரு முறை பயன்படுத்தி தூக்கி எரியப்படும் நெகிழி கழிவுகள் பயன்பாட்டை தடைசெய்யும் நீதி பேரானை நடைமுறைப்படுத்த சமந்தப்பட்ட உள்ளாட்சி அமைப்புகளின் நிருவாகத்திற்குற்பட்ட சுற்றுச்சூழல் பொறியாளர்களுடன் இணைந்து ஆய்வு மேற்கொள்ள அறிவுறுத்தப்பட்டது.

மேலும், மாதம் ஒருமுறை ஒவ்வொரு தலைப்பின் கீழ் நடைபெறும் மாபெரும் நெகிழி கழிவு சேகரிப்பு நிகழ்வு மற்றும் சுத்தம் செய்யும் நிகழ்வில் உள்ளாட்சி அமைப்புகள் பங்கு பெற்று சேகரிக்கப்படும் நெகிழி கழிவுகளை இணை எரியூட்டு முறையில் அகற்றப்பட வேண்டும். நெகிழி கழிவு மேலாண்மையை திறம்பட செயல்படுத்துவது குறித்தான கலந்தாய்வு



மேற்கொள்ளப்பட்டது.

நெகிழி (பிளாஸ்டிக்) மாசுபாட்டைக் குறைக்க மாவட்ட அளவிலான பணிக்குழுக்கூட்டம் விழிப்புணர்வு நிகழ்ச்சிகளை ஏற்பாடு செய்ய பள்ளிகள், கல்லூரிகள், பல்கலைக்கழகங்கள், NCC, NSS, சாரண சாரணியர் இயக்கம், இளைஞர் மன்றங்கள், பசுமை மன்றங்கள் மற்றும் தன்னார்வ அமைப்புகளை இணைத்து வலுவான மக்கள் இயக்கத்தை உருவாக்க வேண்டும். சுற்று சூழலுக்கு உகந்த மாற்றுப்பொருட்கள் பயன்பாட்டை ஊக்குவித்து பரப்புரைகள் மேற்கொள்ள அறிவுறுத்தப்பட்டுள்ளது. மேலும், இக்கூட்டத்தில் நெகிழி கழிவு அமைப்பில் உள்ள குறைகளை நிவர்த்தி செய்வதற்கான வழிமுறைகள் குறித்து விவாதிக்கப்பட்டது. இந்நிகழ்வை ஒருங்கிணைத்து நடைமுறை படுத்த பசுமை

தோழி என்ற பணியிடம் நியமிக்கப்பட்டுள்ளது .

மேலும், மாசுக்கட்டுப்பாட்டு வாரிய திருப்பூர் வடக்கு சார்பில் தவறிழைத்த 20 நிறுவனங்களும், திருப்பூர் தெற்கு சார்பில் 01 நிறுவனத்திற்கும் மின் இணைப்பு துண்டிப்பு. தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியத்தினால் செட்டிபாளையம், பாண்டியன்நகர், வேலம்பாளையம், வெள்ளியங்காடு, குமார் நகர், அணைப்பாளையம், சிறுபூலுவப்பட்டி, நெருப்பெரிச்சல், அனுப்பர்பாளையம், அருள்புரம் ஆகிய பகுதிகளில் திடீர் ஆய்வு மேற்கொள்ளப்பட்ட போது வாரியத்தின் அனுமதியின்றி முறைகேடாக இயங்கி வந்த 21 பிரிண்டிங் நிறுவனங்கள் கண்டறியப்பட்டு மாவட்ட ஒருங்கிணைப்பு குழு வாயிலாக மின் இணைப்பு துண்டிப்பு மற்றும் மூடுதல் உத்தரவு இடப்பட்டு தவறிழைத்த தொழிற்சாலைகள் மீது நடவடிக்கை மேற்கொள்ளப் பட்டுள்ளது.

மேலும், முந்தைய மாதங்களில் நடந்த ஒருங்கிணைப்பு குழு மூலம் மின் இணைப்பு துண்டிக்கப்பட்ட 17 நிறுவனங்கள் தங்களது தவறுகளை சரிசெய்த பின் மீண்டும் மின் இணைப்பு பெற உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. தமிழ்நாடு மாசு கட்டுப்பாட்டு வாரியத்தின் ஆய்வினை தீவிரப்படுத்தி தவறிழைக்கும் தொழிற்சாலைகளை கண்டறியும்படி சம்மந்தப்பட்ட அலுவலர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. இவ்வாறு மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் மனிஷ் நாரணவரே இ.ஆ.ப. அவர்கள் தெரிவித்தார்கள்.

இக்கூட்டத்தில், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) மகாராஜ், பொது மேலாளர் (ஆவின்) சுஜாதா, மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர்கள் (திருப்பூர் வடக்கு) பாரதிராஜா, (திருப்பூர் தெற்கு) ரங்கராஜ் மற்றும் பறக்கும் படை சுற்றுச்சூழல் பொறியாளர் லாவண்யா மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டார்கள்.

SAKKRA VIYUGAM owned and published by PAL PANDIAN, printed at SHANLAX PRESS 66, VP COMPLEX, TPK MAIN ROAD, VASANTHA NAGAR, MADURAI-625003, Published at 70/53 A1, THILAGAR NAGAR 1ST STREET, ANUPPARPALAYAM, TIRUPPUR, TAMIL NADU-641652 Editor: PAL PANDIAN Phone : 88705 00000